**Dated : 11.08.2025** (நேரம் : நண்பகல் 12.10 மணி)

**CC. No. 299/2022**

**PW 1 திரு. உவைசுல் கரீம்**

( எதிரி ஆஜர்.)

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை –**

விபத்து சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு முன்பே என் தகப்பனார் என் சகோதரி வீட்டில் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். சம்பவ நாளில் என் தகப்பனார் எத்தனை மணிக்கு ஊரிலிருந்து பொருள் வாங்குவதற்கு புறப்பட்டு இராமநாதபுரம் சென்றார் என்றும், பின்னர் மீண்டும் எத்தனை மணிக்கு அங்கிருந்து திரும்பி வந்தார் என்றும் எனக்கு நேரடியாக தெரியாது. சாட்சிகள் முகமது ரைசுதீன், முஸ்தபா கமால், அசாரூதின் மற்றும் ஜாகிர் உசேன் ஆகியோர் எங்களை சேர்ந்தவர்கள் மற்றும் எங்கள் ஜமாத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற நேரத்தில் என் தகப்பனார் இராமநாதபுரத்திலிருந்து சித்தார்கோட்டைக்கு பைக்கில் வந்து கொண்டிருந்தார். எதிரி சித்தார்கோட்டையிலிருந்து இராமநாதபுரம் நோக்கி பைக்கில் வந்தார். இராமநாதபுரத்திலிருந்து சித்தார்கோட்டைக்கு செல்ல வேண்டும் என்றால் ரோட்டின் வடக்குப்பக்கமாக தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். அதுபோல் சித்தார்கோட்டையிலிருந்து இராமநாதபுரத்திற்கு செல்ல வேண்டும் என்றால் ரோட்டின் தெற்குப்பக்கமாக தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். என் அப்பா இராமநாதபுரத்திலிருந்து சித்தார்கோட்டைக்கு செல்லும்போது எதிர்பாராதவிதமாக மாடு ஒன்று குறுக்கே வந்ததால் தனது வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்து எதிர்திசைக்கு சென்றதால் விபத்து ஏற்பட்டதாக தான் நான் கேள்விப்பட்டேன். விபத்து நடந்து சுமார் 5 நிமிடம் கழித்து தான் நானும், எனது நண்பர்களும் சம்பவ இடத்திற்கு சென்றோம். சம்பவத்தை நான் நேரில்

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2025.08.11 17:28:12 +0530

பார்க்கவில்லை இருவரும் அடிப்பட்டு கிடப்பதை கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்று அவர்களை ஜமாத் ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது என் அப்பா இறந்துவிட்டார். அப்போது எதிரி மயக்கமாக தான் இருந்தார். வழக்கு சம்பந்தமாக புகார் கொடுத்தால் தான் விபத்து நஷ்ட ஈடு பெற முடியும் என்று போலீசார் சொன்னதால் புகார் கொடுத்தேன். போலீசார் சொல்லி கொடுத்தப்படி புகார் மனு எழுதிக்கொடுத்தேன். அதற்கு பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**மறு விசாரணை – இல்லை**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2025.08.11 17:28:18 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.